## உதவக்கூடிய அமைப்புக்கள்

**டொரண்டோ நகரம்:** 311

---

**மெட்ரோ குத்தகைதாரர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு (Federation of Metro Tenants' Associations - FMTA)**

டொராண்டோவில் உள்ள குத்தகைதாரர் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய கேள்விகளுக்குப் பதிலளிக்கின்றது.

416-921-9494

hotline@torontotenants.org

---

**வீட்டு உரிமைகளுக்கான கனேடிய மையம் (Canadian Centre for Housing Rights)**

ஒன்ராறியோவில் தங்களுடைய வீடுகள் தொடர்பில் சவால்களை எதிர்கொள்ளும் குத்தகைதாரர்களுக்கு இலவச, இரகசியமான தனிப்பட்ட சேவைகளை வழங்குகின்றது.

416-944-0087

cchr@housingrightscanada.com

---

**சட்ட உதவி ஒன்ராறியோ (Legal Aid Ontario)**

குறைந்த வருமானம் பெறும் குத்தகைதாரர்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குகின்றது.

1-800-668-8258

legalaid.on.ca/legal-clinics

---

**புலம்பெயர்ந்தோருக்கான நிலையம் மற்றும் சமூக சேவைகள் (Centre for Immigrant and Community Services - CICS)**

டொரண்டோவில் உள்ள குத்தகைதாரர் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய கேள்விகளுக்கு பதிலளிக்கின்றது.

416-292-7510 நீட்டிப்பு. 1222

housing.support@cicscanada.com

**குறுஞ்செய்தி அல்லது Whatsapp:** 647-473-2065

சட்ட உதவியை வழங்கக்கூடிய மேலதிக நிறுவனங்கள் பற்றிய தகவலுக்கு, இணைப் பார்வையிடவும்

**toronto.ca/EvictionHelp**

# பல் குத்தகைதாரர் (அறை) வீடுகளில் குத்தகைதாரர் உரிமைகள்




TORONTO

311 toronto at your service

## குத்தகைதாரர்களுக்கான தகவல்கள்

பல் குத்தகைதாரர் (அறை) வீடுகள் என்பது நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள் தனி நபர்களுக்கு குத்தகைக்கு விடப்படும் கட்டிடங்கள் ஆகும். குத்தகைதாரர்கள் சமையலறையை மற்றும்/அல்லது கழிவறையை பகிர்ந்து கொள்ளலாம், ஆனால் அவர்கள் ஒரே குடும்பமாக ஒன்றாக வாழ மாட்டார்கள்.

**மாநகர சபையானது வீட்டு உரிமையாளர்களுடன் இணைந்து செயற்படுவதுடன் கடுமையான தீ அல்லது உயிர் பாதுகாப்பு அபாயம் கண்டறியப்படும் வரையில் பல் குத்தகைதாரர் வீட்டை மூடாது. தீ அல்லது அவசரகால வெளியேற்றங்கள் காரணமாக தங்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டிய குத்தகைதாரர்களுக்கு, அவசரகால சமூக சேவைகள், குறுகிய கால தங்குமிடம் மற்றும் ஆடை மற்றும் உணவு போன்ற அத்தியாவசிய பொருட்களை வழங்க முடியும். மேலதிக தகவல்களுக்கு குத்தகைதாரர்கள் 311 ஐ அழைக்கலாம்.**

## பல் குத்தகைதாரர் வீட்டில் உங்கள் உரிமைகள்

- பெரும்பாலான குத்தகைதாரர்கள் ஒன்டாரியோவின் குடியிருப்பு குத்தகை சட்டத்தால் (Residential Tenancies Act- RTA) பாதுகாக்கப்படுகிறார்கள். இந்தச் சட்டங்கள் வீட்டு உரிமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்களின் உரிமைகள் மற்றும் கடமைகளை கோடிட்டுக் காட்டுகின்றன. உத்தியோகபூர்வ வெளியேற்ற அறிவித்தல் இல்லாமல் உங்கள் வீட்டு உரிமையாளர் உங்களை வெளியேற்ற முடியாது. இந்த அறிவித்தல்கள் **நீங்கள் வெளியேற வேண்டும் என்று அர்த்தம் தருவதில்லை**. உங்கள் வீட்டு உரிமையாளரிடமிருந்து வெளியேற்ற அறிவித்தலைப் பெற்றால், சட்ட ஆலோசனையைப் பெறவும். உங்கள் வீட்டு உரிமையாளர், வீட்டு உரிமையாளர் மற்றும் குத்தகைதாரர் சபையில் (Landlord and Tenant Board - LTB) வெளியேற்ற விண்ணப்பத்தைத் தாக்கல் செய்து LTB **வெளியேற்றக் கட்டளை** ஒன்றை வெளியிடும் வரை நீங்கள் வெளியேற வேண்டியதில்லை.
- உங்கள் வீட்டு உரிமையாளர் உங்களுக்கு எதிராக வெளியேற்ற விண்ணப்பத்தை தாக்கல் செய்திருந்தால், ltb@ontario.ca எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்புவதன் மூலம் LTB யைத் தொடர்புகொண்டு உங்களைப் பற்றிய மற்றும் உங்கள் அப்பார்ட்மெண்ட் (Apartment) பற்றிய அனைத்து அறிவிப்புகளையும் உங்களுக்கு மின்னஞ்சலில் அனுப்புமாறு கேட்கலாம். உங்கள் பல் குத்தகைதாரர் வீட்டுக்கு மாநகர சபையின் உரிமம் பெறப்பட்டிருக்காவிட்டாலும், நீங்கள் RTA ஆல் பாதுகாக்கப்படுகின்றீர்கள். **வீட்டுக்கு உரிமம் இல்லை என்ற ஒரே காரணத்திற்காக உங்கள் வீட்டு உரிமையாளரால் உங்களை வெளியேற்ற முடியாது.**

பெரும்பாலான பல் குத்தகைதாரர் வீட்டு குத்தகைதாரர்கள் RTA இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் இச்சட்டம் வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பை வழங்கலாம். சில குத்தகைதாரர்கள், உதாரணமாக, சமையலறையை அல்லது குளியலறையை உரிமையாளருடனோ அல்லது அவரது நெருங்கிய குடும்பத்தாரோடு பகிர்ந்து கொண்டால், அவர்கள் பள்ளி விடுதியில் வசித்திருந்தால் அல்லது சில வகையான அறைத்தோழன் அல்லது அறைத்தோழி சூழ்நிலைகளில் இருந்தால் அவர்களை இச்சட்டம் உள்ளடக்காது. உங்கள் சட்ட நிலையைப் பற்றிய கேள்விகளுக்கு FMTA குத்தகைதாரர் உடனடி அழைப்பு இலக்கமான 416-921-9494 எனும் எண்ணில் அழைக்கவும்.

RTA பற்றிய மேலதிக தகவலுக்கு, **https://tribunalsontario.ca/ltb/renting-in-ontario/** ஐப் பார்வையிடவும்

## வீட்டு உரிமையாளர் பொறுப்புகள் மற்றும் ஒரு முறைப்பாட்டை சமர்ப்பிக்கும் முறை

குளியலறைகள், சமையலறைகள் மற்றும் தாழ்வாரங்கள் உள்ளிட்ட பொதுவான இடங்களை சுத்தம் செய்வதும் பராமரிப்பதும் வீட்டு உரிமையாளர்களின் பொறுப்பாகும். வீட்டு உரிமையாளர் கழிவு மற்றும் பீடை முகாமைத்துவதற்கான திட்டங்களையும் வைத்திருக்க வேண்டும். பீடைகள் இருந்தால், அவற்றின் பரவலைத் தடுக்கவும் அவற்றை அகற்றவும் வீட்டு உரிமையாளர் போதுமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

உங்கள் வீட்டு உரிமையாளர் அவசரமற்ற சேவை கோரிக்கைகளுக்கு ஏழு நாட்களுக்குள் பதிலளிக்க வேண்டும் மற்றும் அவசர சேவை கோரிக்கைகளுக்கு 24 மணி நேரத்திற்குள் பதிலளிக்க வேண்டும். அவசர கோரிக்கைகளில் எரிபொருள், மின்சாரம், எரிவாயு, வெப்பம், குளிர் அல்லது சுடு நீர் பிரச்சினைகள் உள்ளடங்கலாம்.

உங்கள் அறை அல்லது உங்கள் பல் குத்தகைதாரர் வீட்டின் பொதுப் பகுதி பற்றி புகார் உள்ளதா? உங்கள் வீட்டு உரிமையாளரிடம் பேசி எழுத்துமூலம் முறைப்பாட்டைச் சமர்ப்பிக்கவும்.

உங்கள் வீட்டு உரிமையாளர் நடவடிக்கை எடுக்காமல் சிக்கல்கள் தொடர்ந்தால், 311 ஐத் தொடர்பு கொள்ளவும். உங்கள் முறைப்பாடு 311 க்கு சமர்ப்பிக்கப்பட்டதும், மாநகர சபை ஊழியர்கள் அதனை விசாரித்து உரிய நடவடிக்கை எடுப்பார்கள்.

toronto.ca/311 இல் 311 மூலம் உங்களுக்கு வழங்கப்பட்ட தொடர்பு இலக்கத்தைப் பயன்படுத்தி உங்கள் கோரிக்கையின் நிலையைச் சரிபார்க்கலாம்.

டொராண்டோவில் உள்ள பல் குத்தகைதாரர் வீடுகள் பற்றிய மேலதிக தகவலுக்கு, **toronto.ca/MultiTenantHouses** ஐப் பார்வையிடவும்